HAUSFELD

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

**ஊடக அறிக்கை**
9 ஏப்ரல் 2019

**இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக அமெரிக்காவில் உரிமையியல் வழக்கு**

**ஜோகானஸ்பேர்க், தென்னாப்பிரிக்கா:** சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பும் (ITJP), அமெரிக்காவில் உள்ள ஹோஸ்பெல்ட் என்ற சர்வதேச சட்ட நிறுவனமும், மனித உரிமைகள் சட்டத்தரணி ஸ்கொட் கில்மோர் என்பவரும் இணைந்து இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக சித்திரவதையில் உயிர்தப்பிய தமிழரான றோய் சமத்தானம் என்பவர் சார்பில் கலிபோர்னியாவில் உரிமையியல் பாதிப்பு வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

றோய் சமத்தானம் அமெரிக்க மற்றும் இலங்கை என இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட திரு. ராஜபக்சவிற்கு எதிராக கலிபோர்னியாவின் மத்திய மாவட்டத்திற்கான அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் முறையீட்டை மேற்கொண்டார். இந்த வழக்கு அமெரிக்க நீதிமன்றங்களில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வினை அளிக்கக்கூடிய சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞாயிற்றுக் கிழமை இரவு இது பற்றிய அறிவிப்பு திரு ராஜபக்ச அவர்களிடம் உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்டது. அதே நேரம் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் சார்பில் இன்னுமொரு அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றிய அறிவிப்பும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

ஒரு கனேடிய பிரஜையான. றோய் சமத்தானம் அன்றைய காலத்தில் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவின் நேரடிக்கட்டளையின் கீழ் செயற்பட்ட இலங்கைக் காவல்துறையினரால் செப்டெம்பர் 2007 இல் இலங்கையின் தலைநகர் கொழும்பில் வைத்து தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார். தனது வாழ்கைத்துணையை திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கைக்கு சென்ற திரு. சமத்தானம் 3 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டதுடன் அவர் ஒரு சட்டத்தரணியையோ அல்லது ஒரு நீதிபதியையோ அணுகுவதற்கான உரிமை அவருக்கு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டது. திரு. ராஜபக்ச அவர்களின் தலைமையின் கீழ் அவரது கட்டளைக்கு ஏற்ப காவலர்கள் திரு சமத்தானம் அவர்களை சித்திரவதை செய்ததுடன் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளை பாலியல் வல்லுறவுகொண்டு கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்தி அவரை மற்றக் கைதிகளின் உடலில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு அவர்கள் வதைக்கப்படுவதை பார்க்கவைத்துள்ளனர். ஆகஸ்ட் 2010 இல் இரங்கல் மனு மற்றும் தண்டப்பணம் செலுத்தியதன் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர் அவர் போலியான ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிடுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளார்.

விடுதலையானது முதல் திரு. சமத்தானம் நன்கு அறியப்பட்டவராக இருந்தார். 2011 இல் அவர் தனது துன்பியலைப் பற்றி கனேடிய பாராளுமன்றத்தில் சாட்சியமளித்தார். 2016 இல் திரு சமத்தானம் ஐநா மனித உரிமைகள் சபை வழக்கில் வெற்றி பெற்றார். ஆனால் இலங்கை அதற்கான நட்டஈட்டு தீர்ப்பினை பின்பற்றத் தவறிவிட்டது..

“நான் சிறையில் இருந்தபோதுதான் மனிதத்தன்மையற்ற செயல் என்றால் அது எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொண்டேன்” என்று வழக்கின் வாதியான திரு. சமத்தானம் தெரிவித்துள்ளார். “இதுவரையில் பொறுப்புக்கூறல் என்பது அங்கு இல்லவே இல்லை. எனவே நீதியை பெற்றுக்கொள்வதற்கான இந்த முதல் நடவடிக்கையை மேற்கொள்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நடவடிக்கையானது இலங்கையில் சித்திரவதைக்குள்ளானவர்களுக்கு எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையைக் கொடுக்கும்”.

“தமிழர் என்ற இன அடையாளத்திற்காகவே இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட எண்ணற்ற பொதுமக்களில் திரு. சமத்தானமும் ஒருவர்” என்று சிரிய அரசுக்கு எதிராக சண்டே டைம்ஸ் ஊடகவியளாளர் மேரி கோல்வின் அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்த இழப்பீட்டு வழக்கினை வெற்றிகரமாக முன்னெடுத்த மனித உரிமைகள் சட்டத்தரணி ஸ்கொட் கில்மோர் அவர்கள் தெரிவித்துள்ளார். “பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்கான பெறுப்பு சர்வதேச சட்டத்தின் படி கட்டளையதிகாரி என்ற வகையில் திரு. ராஜபக்ச அவர்களையே சாரும்”.

ITJP அமைப்பின் செயல் இயக்குநர், யாஸ்மின் சூக்கா: “இதுவே கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வெளிநாட்டில் தாக்கல் செய்யப்படுகின்ற உரிமையியல் வழக்குகளின் முதலாவது நிகழ்வு என்று நம்பப்படுகிறது. ஏனையவர்களும் முன்வந்து எம்மை தொடர்பு கொள்வார்கள் என்று நாம் நம்புகிறோம். அவர்கள் குறைநிவர்த்திக்கான ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையில் இணைந்துகொள்ள முடியும்”.

அனைவர் மத்தியிலும் முதலில் முன்வந்த றோய் அவர்களின் துணிச்சலை நாம் மெச்சுவதுடன் இலங்கையில் நீதியை பெற்றுக்கொள்வதற்கு எமது நிபுணத்துவமும் வளங்களும் பயனுள்ளதாக இருக்க முடியும் என்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் என ஹோஸ்பெல்ட் இன் தலைவர் மிக்கேல் ஹோஸ்பெல்ட் தெரிவித்துள்ளார். “மேலும் அதிகப்படியான பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவார்கள் என்று நாம் நம்புகிறோம்”.

### மேலதிக ஊடகத் தகவல்களுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

சோபி டோமாஸிஸ் +44 (0)7974 428858 அல்லது பிரான்ஸிஸ் ஹரிஸன் +44 (0)7946 488089

## செய்தி ஆசிரியர்களுக்கான குறிப்புகள்

### ஸ்கொட் கில்மோர் அவர்கள் பற்றி

ஸ்கொட் கில்மோர் வாஷிங்டனை தளமாக கொண்ட ஒரு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி ஆவார். இவர் ISIS பணையக்கைதியாக இருந்த ஜேம்ஸ் போலே குடும்பத்தினர் மற்றும் கெயிட்டியில் பேபி டொக் டுவாலியரால் பாதிக்கப்பட்டவர்கள் அடங்கலாக உலகம் முழுவதிலும் சித்திரவதைகள் மற்றும் போர்க்குற்றங்களிலிருந்து மீண்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் வகித்தவர். *சண்டே டைம்ஸ்* ஊடகவியலாளர் மேரி கொல்வின் கொல்லப்பட்டதற்காக சிரியாவின் அசாத் அடக்குமுறை அரசுக்கு எதிராக 2019 இல் இவர் 303.6 மில்லியன் டொலர்களை வென்றவர்.

### ஹோஸ்பெல்ட் பற்றி

ஹோஸ்பெல்ட் நிறுவனம் பேர்ளின், போஸ்டன், பிரசெல்ஸ், டுசல்ட்றொப், லண்டன், ஸ்றொக்ஹோம், நியூயோக், பாரிஸ், பிலடெல்பியா, சான் பிரான்ஸிஸ்கோ மற்றும் வாஷிங்டன் டிசி என பல நகரங்களில் அலுவலகங்களை கொண்ட ஒரு முன்னணி சர்வதேச சட்ட நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் குறிப்பாக நம்பிக்கைக்கு எதிரான / வணிகப்போட்டி, நிதிச் சேவைகள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு, சூழலியல், வெகுஜன சித்திரவதைகள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் என பெரும்பாலும் சர்வதேச பரிமானங்களுடனான சிக்கல்நிறைந்த வழக்குகளில் பரந்துபட்ட அளவிலான நிபுணத்துவத்தை கொண்டுள்ளது. ஹோஸ்பெல்ட் நிறுவனம் மட்டுமே அமெரிக்கா ஐரோப்பா இரண்டிலும் நம்பிக்கைக்கு எதிரான / வணிகப்போட்டி சட்டத்தை தனியார் அமுலாக்கம் செய்வதில் லீகல் 500 மற்றும் சேம்பர்ஸ் & பாட்னர்ஸ் அமைப்புகளால் கோரிக்கையாளர்களின் முதல் தரமான ஒரே நிறுவனம் என்ற தகுதிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**ITJP பற்றி**

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு தென்னாப்பிரிக்காவின் நிலைமாற்று நீதி சார்ந்த வல்லுநர் யாஸ்மின் சூக்கா அவர்களால் நடாத்தப்படுகின்ற ஒரு அரசு சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போரின் இறுதிக்கட்டம் மற்றும் போருக்கு பிந்தயை காலம் தொடர்டபுடைய பாரிய சான்றாவணங்களையும் வேறுபல தகவல்களையும் கொண்டுள்ளது. ஆகஸ்ட் 2017 இல் ITJP அமைப்பு சிலி, பிரேசில், பெரு மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் அங்கு ராஜதந்திரியாக இருந்த இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஒருவருக்கு எதிராக போரில் குற்றமென்று கருதப்பட்ட அவரது செயற்பாடு மற்றும் சித்திரவதைக்காக எல்லைகளை கடந்த 4 வழக்குகளை தாக்கல் செய்தது.